DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 252 / 2015
Deposition of PW5 / LW

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ரவீந்திரன் |
| Father's / Husband Name | : | சுந்தரபாண்டியன் |
| Village | : | கடமலைக்குண்டு |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | காவல் ஆய்வாளர் |
| Age | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23.01.2026.

எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

1.) நான் தற்போது கடமலைக்குண்டு வட்ட காவல் ஆய்வாளராக இருந்து வருகிறேன். இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரிகளான சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகேசன் மற்றும் காவல் ஆய்வாளர் சுந்தந்திரராஜன் ஆகியோர்கள் பணிமாறுதலாகி சென்றுள்ளபடியால் அவர்களின் கையொப்பம் எனக்கு நன்றாக தெரியும் என்பதால் வழக்கின் ஆவணங்களை பார்த்து நானே சாட்சியம் அளிக்கிறேன்.

2.) கடந்த 27.07.2015 அன்று 17.30 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகேசன் நிலையபொறுப்பில் இருந்தபோது க.விலக்கு அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலைப் பெற்று, அங்கு சிகிச்சையில் இருந்த அன்பரசன் பெரியப்பா மகன் முருகன் என்பவரிடம் இருந்து வாக்குமூலம் பெற்று பின்பு நிலையம் நிலையம் வந்து 21.00 மணிக்கு கடமலைக்குண்டு காவல்நிலைய குற்ற எண்.188/2015 பிரிவுகள் 279, 337,304(A) இதசவாக வழக்கு பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அசாஆ 2** .

3.) மருத்துவமனையில் சிசிச்சையில் இருந்த அன்பரசன் என்பவர் 27.07.2015 ம் தேதி மாலை 6.50 மணிக்கு இறந்துவிட்ட தகவலைப் பெற்று இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 279, 337 இதசவில் இருந்து சட்டப்பிரிவு 304(A) இதசவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ–3.** பின்பு 28.07.2015 ம் தேதி காலை 10.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சுரேஷ் மற்றும் மாரியப்பன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அசாஆ 4, மாதிரி வரைபடம் அசாஆ 5.** அன்றே சாட்சிகள்1 முருகன், 2 ஈஸ்வரன், 3 பாண்டியம்மாள், 4 நாட்ராயன், 5 சுரேஷ் 6 மாரியப்பன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5.) அன்றே இவ்வழக்கில் இறந்துபோன அன்பரசன் என்பவரின் பிரேதத்தின் மீது க.விலக்கு அரசுமருத்துவமனையில் வைத்து காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேதபரிசோதனைக்காக காவலர் 1555 சுரேஷ்குமார் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தனுப்பியுள்ளார். **பிரேத விசாரணை அறிக்கை அசாஆ 6.**

6.) 03.10.2015 அன்று இவ்வழக்கினை காவல் ஆய்வாளர் சுகந்திரராஜன் அவர்கள் மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடம் சென்று பார்வையிட்டும், சாட்சிகளை விசாரித்த போது அவர்கள் சிறப்பு சார்பு ஆய்வாளர் அவரிகளிடம் கூறியது போல கூறியதால் மறு வாக்குமூலம் பெறவில்லை. அன்றே இறந்துபோன அன்பரசன் என்பவருக்கு பிரேதபரிசோதனை செய்த க.விலக்கு அரசுமருத்துவமனை மருத்துவர் ஜீலியான ஜெயந்தி என்பவரை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **பிரேத பரிசோதனை அறிக்கை அசாஆ 7.** பின்பு காவலர் 1555 சுரேஷ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

7.) அன்றைய தினமே அன்பரசன்–க்கு முதலுதவி சிகிச்சை செய்த பெல்ஜிமெல்பா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அன்று விபத்து வாகனமாக TN 60 K 2415 என்ற Hero Honda என்ற வாகனத்தை தேனி வட்டார போக்குவரத்து அலுவலகத்துக்கு மோட்டார் வாகன ஆய்விற்காக வேண்டுதல் கடிதம் கொடுத்தனுப்பிள்ளார். 27.08.2015 ம் தேதி தேனி வட்டார போக்குவரத்து அலுவலர் கணேச சுப்பிரமணியம் என்பவரை விசாரித்து மோட்டார்

வாகன ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **ஆய்வறிக்கை அசாஆ 8** . எதிரி நீதிமன்ற பிணையில் சென்றதால் அவரை கைது செய்யவில்லை. 03.10.2015 அன்று தனது விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவு 304(A) இதச –ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. இவ்வழக்கில் இறந்துபோன அன்பரசன் என்பவருக்கு பாண்டியம்மாள், ஈஸ்வரன் , முருகன், முருகன் த.பெ.ராஜா ஆகியோர் உறவினர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் இருந்த நபர்களை சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி சம்பவத்தின்போது மிதமான வேகத்தில் கவனமாக வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்றால் சரியல்ல. சம்பவத்தினை சரியாக விசாரிக்காமல் சிறப்பு சார்பு ஆய்வாளர் பிழையான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. காவல் ஆய்வாளர் சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் தவறான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. சாட்சிகளை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஆய்வாளர் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நடைபெற்ற விபத்து எதிரியின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நடைபெற்ற சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட நபரின் குடும்பத்தினருக்கு விபத்து காப்பீடு பெற்றுத்தரவேண்டி எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.01.23 16:02:21 +0530

Judicial Magistrate,
Andipatti.